# மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ, கார் சேவை: பயணிகள் வரவேற்பு

சென்னை, ஆக.12: சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் தொடங்கப்பட்டுள்ள ஷேர் ஆட்டோ, கார் சேவை திட்டம் வரவேற்புக்குரியது. இதை அனைத்து ரயில் நிலையங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று மெட்ரோ ரயில் பயணிகள் கூறினர்.

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் தொடங்கப்பட்ட மெட்ரோ ரயில் நிலையம், மாநகரின் பல பகுதிகளை இணைக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. பயணிகளின் வருகையை அதிகரிக்கும் விதமாக பல்வேறு நடவடிக்கைகளை மெட்ரோ ரயில்வே நிர்வாகம் எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 3 கி.மீ. சுற்றளவு தூரத்துக்குச் செல்ல காலை 6.30 மணியில் இருந்து இரவு 9.30 மணி வரை சோதனை அடிப்படையில் ஷேர் ஆட்டோ, கார் சேவை திட்டம் கடந்த சனிக்கிழமை முதல் (ஆகஸ்ட் 11) தொடங்கப்பட்டுள்ளது.

**குறைந்த கட்டணத்தில்...:** அதன்படி, அசோக் நகர், ஆலந்தூர், ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி, கோயம்பேடு, பரங்கிமலை, சின்னமலை, திருமங்கலம் ஆகிய 8 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 3 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் செல்ல ஒருவருக்கு ரூ.10-இல் ஷேர் ஆட்டோ சேவையும், கோயம்பேடு ரயில் நிலையம், ஆலந்தூர், அண்ணா நகர் மேற்கு, ஏஜி-டிஎம்எஸ், வடபழனி ஆகிய 5 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 3 கி.மீ. சுற்றளவுக்குள் செல்ல ஒருவருக்கு ரூ.15-இல் கார் சேவையும் வழங்கப்படுகிறது. பயணிகள் தங்களின் மெட்ரோ ரயில் டிக்கெட்டை கார் அல்லது ஆட்டோ ஓட்டுநரிடம் காட்டி உரிய கட்டணத்தைச் செலுத்தி பயணம் செய்யலாம்.

**பயணிகளிடம் வரவேற்பு:** இதுகுறித்து மெட்ரோ ரயில் பயணிகள் கூறுகையில், 'மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து செல்ல ஆட்டோ, கார்களுக்கு அதிக வாடகை கொடுத்து வந்தோம். தற்போது, குறைந்த கட்டணத்தில் தொடங்கப்பட்டுள்ள ஷேர் ஆட்டோ, கார் சேவை திட்டம் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்த சேவையை அனைத்து ரயில் நிலையங்களுக்கும் நீட்டிக்க வேண்டும்' என்றனர்.

**திட்டம் விரிவுபடுத்தப்படும்:** இதுகுறித்து மெட்ரோ ரயில் நிலைய அதிகாரி ஒருவர் கூறுகையில், தற்போது, இந்த சேவை 6 மாதங்களுக்குச் சோதனை அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளது. பயணிகளிடம் உள்ள வரவேற்பை பொருத்து அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்றார்.